## தமிழ்ப் பண்பாட்டின் காவல் அரணாகத் திகழும்

# கழக ஆட்சியின் சாதனைகளைக் கண்டு எதிர்க்கட்சிகள் கலங்கி நிற்கின்றன!

## வட சென்னையில் 48 இணையர்களுக்கு மணவிழாவை நடத்தி வைத்து – துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் விமர்சனம்!



தமிழ்நாடு துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் நேற்று முன்தினம் (17.11.2024) கங்கச்சாவடி தங்கம் மாளிகை திருமண மண்டபத்தில் சென்னை வடக்கு மாவட்ட தி.மு.கழகத்தின் சார்பில் நடைபெற்ற எளியோர் எழுச்சி நாள் விழாவில் 48 இணையர்களுக்கு திருமணங்களை நடத்தி வைத்து அவர்களை வாழ்த்தி, சீர்வரிசை பொருட்களை வழங்கினார். இந்நிகழ்ச்சியில் வனத்துறை அமைச்சர் க.பொன்முடி, இந்து சமய அறநிலையத் துறை அமைச்சர் பி.கே.சேகர்பாபு, நாடாளுமன்ற உறுப்பினர் டாக்டர். கலாநிதி வீராசாமி, சட்டமன்ற உறுப்பினர் – மாவட்டச் செயலாளர் ஆர்.டி.சேகர், சட்டமன்ற உறுப்பினர்கள் ஜே.ஜே.எபினேசர், ஐட்ரீம் இரா.மூர்த்தி, கே.பி.சங்கர் உள்பட தி.மு.கழக நிர்வாகிகள் கலந்து கொண்டனர்.

**சென்னை, நவ.19–**

**வடசென்னையில் 48 இணையர்களுக்கு மணவிழாவை நடத்தி வைத்து உரையாற்றிய துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் “தமிழ்ப் பண்பாட்டின் காவல் அரணாக விளங்கும் கழக ஆட்சியின் சாதனைகளைக் கண்டு எதிர்க்கட்சிகள் கலங்கி நிற்கின்றன” என்று கூறினார்.**

**சென்னை வடக்கு மாவட்டக் கழகம் சார்பாக, `எளியோர் எழுச்சி நாள்’ என்ற பெயரில் 48 இணையர்களுக்கான திருமணம் மற்றும் நலத்திட்ட உதவிகள் வழங்குகின்ற விழா நேற்று முன்தினம் சென்னையில் நடைபெற்றது. இதில் துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் கலந்து கொண்டு மணமக்களை வாழ்த்தி சிறப்புரையாற்றினார்.**

துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் ஆற்றிய சிறப்புரை வருமாறு :-

“எளியோர் எழுச்சி நாள்” என்ற பெயரில் சென்னை வடக்கு மாவட்டக் கழகம் சார்பாக, அண்ணன் ஆர்.டி.சேகர் அவர்களின் ஏற்பாட்டில் இன்றைக்கு 48 இணையர்களுக்கான திருமணம் மற்றும் நலத்திட்ட உதவிகள் வழங்குகின்ற விழாவில், பங்கேற்று உங்களை எல்லாம் சந்திப்பதில் மிகுந்த மகிழ்ச்சி அடைகிறேன் பெருமை அடைகிறேன்.

### 48 திருமணங்கள்

என்னுடைய 48வது பிறந்தநாளையொட்டி 48 திருமணங்கள் ஏற்பாடு செய்துள்ளனர். ஆனால், ஏற்கெனவே காலையிலேயே 2 திருமணங்களை என் இல்லத்தில் வைத்து, நடத்தி வைத்துள்ளேன். அதற்காக 50 வயதாகிவிட்டது என்று சொல்லக் கூடாது. 48 வயதாகிவிட்டது என்று அதையும் சொல்லிக்கொண்டே இருக்க வேண்டிய அவசியம் இல்லை. நம் திராவிட முன்னேற்றக் கழகம் பிறந்த இந்த சென்னை வடக்கு மாவட்டத்திற்கு பலமுறை வந்திருக்கிறேன். இளைஞர் அணிச் செயலாளராக, விளையாட்டுத்துறை அமைச்சராக, சட்டமன்ற உறுப்பினராக பலமுறை வந்துள்ளேன். இருந்தாலும் துணை முதலமைச்சர் என்ற பொறுப்பை ஏற்ற பிறகு முதன்முறையாக வந்து உங்களை எல்லாம் சந்தித்து வாழ்த்துக்களை பெறுவதற்கும், உங்களை வாழ்த்துவதற்கும் வந்திருக்கிறேன்.

நம் அண்ணன் ஆர்.டி.சேகர் அவர்கள் இளைஞர் அணியின் மாநில துணைச் செயலாளராக செயல்பட்டவர், தலைவரோடு பயணித்தவர். அதுமட்டுமல்லாமல் நான் முதன்முறையாக இளைஞர் அணிச் செயலாளராக பொறுப்பேற்றபோது, இளைஞர் அணியின் மாநில துணைச் செயலாளராக எனக்கு பல்வேறு வழிகளில் துணை நின்று ஆலோசனை வழங்கியவர், என்னை வழி நடத்தியவர் அண்ணன் ஆர்.டி.சேகர் அவர்கள்.

அண்ணன் ஆர்.டி.சேகர் அவர்கள் சென்னை வடக்கு மாவட்டப் பொறுப்பாளர் ஆன பிறகு இங்கு நான் கலந்து கொள்கின்ற முதல் நிகழ்ச்சி இது.

### கழகத்தின் நம்பிக்கை!

இவ்வளவு சிறப்பான நிகழ்ச்சியை ஏற்பாடு செய்ததற்கும், என்னை அழைத்து வந்து வாய்ப்பு கொடுத்ததற்கும் அண்ணன் ஆர்.டி.சேகர் அவர்களுக்கு மீண்டும் என் நன்றியை தெரிவித்துக் கொள்கிறேன். கடந்த 9 மாத காலத்தில் அண்ணன் ஆர்.டி.சேகர் அவர்கள் கழகத் தலைவர் அவர்களால் பாராட்டத்தக்க வகையில், சட்டமன்ற உறுப்பினராகவும், மாவட்ட பொறுப்பாளராகவும் மிகச் சிறப்பாக பணியாற்றி வருகிறார். பொதுவாக வங்கிகளுக்குச் செல்லும் பொழுது ஆர்.டி. டெபாசிட் என்று ஒரு சேமிப்புத் திட்டம் உண்டு. ஆர்.டி.டெபாசிட் என்றால் ரெக்கரிங் டெபாசிட் என்று சொல்வார்கள். ஒவ்வொரு மாதமும் ஒரு குறிப்பிட்டத் தொகையை தொடர்ந்து, டெபாசிட் செய்துகொண்டே வர வேண்டும். குறிப்பிட்ட காலத்திற்குப் பிறகு வட்டியுடன் சேர்த்து மிகப்பெரிய தொகையாக திரும்ப கிடைக்கும். அதுதான் ரெக்கரிங் டெபாசிட் என்பார்கள்.

அப்படிப்பட்ட இளைஞர் அணியில் செயல்பட்ட காலத்தில் இருந்து நம் அண்ணன் ஆர்.டி.சேகர் மீது நம் தலைவர் அவர்களும், கழகமும் வைத்திருக்கின்ற நம்பிக்கை கொஞ்சம் கொஞ்சமாக அந்த நம்பிக்கை, ரெக்கரிங் டெபாசிட் மாதிரி பெருகி பெருகி இன்றைக்கு மீண்டும் கழகத்தின் சென்னை வடக்கு மாவட்டப் பொறுப்பாளராக அவர் சிறப்பாக பணியாற்றுகிறார். அப்படி, அண்ணன் ஆர்.டி.சேகர் மீது கழகமும் தலைவரும் உடன்பிறப்புகளும் வைத்திருக்கின்ற நம்பிக்கை, இன்றைக்கு பல மடங்காக அதிகரித்து திரும்ப கிடைத்துக் கொண்டிருக்கிறது.

### பண்பாட்டுப் புரட்சி!

இந்த நிகழ்ச்சியில் 66 வகையான சீர்வரிசைகளை கொடுத்து 48 இணையர்களுக்கு திருமணத்தை நடத்தி வைத்திருக்கின்றோம். அழைப்பிதழில் `இணையர்கள்’ என்ற அழகான சொல்லைப் பயன்படுத்தி இருக்கிறார் அண்ணன் ஆர்.டி.சேகர் அவர்கள். ஒருவருக்கொருவர் இணையாக இருப்பதற்குப் பெயர்தான் இணையர்கள். இங்கு மேடையில் அந்த 48 பேருக்கும் அவர்களின் பெற்றோர்கள் முன்னிலையில், என் கைகளால் தாலியை எடுத்துக் கொடுத்து திருமண நிகழ்ச்சியை நடத்தி வைத்தேன். இதிலும் சில இணையர்கள் காதல் திருமணங்கள் என்று சொன்னார்கள். இதற்காகவே அண்ணன் ஆர்.டி.சேகர் அவர்களைப் பாராட்ட வேண்டும். அண்ணன் சேகர்பாபு அவர்கள்தான் பல ஜோடிகளுக்கு மாலை எடுத்துக்கொடுத்தார். ஒரு சில ஜோடிகள் அவர்களே மாலையை எடுத்து போட்டுக்கொண்டனர். ஒரு மணமகன் பதற்றத்தில் தாலியை தானே எடுத்துக் கட்டிக்கொண்டார். அதில் தவறு ஒன்றும் இல்லை. பெண்கள்தான் தாலி கட்டிக் கொள்ள வேண்டுமென்று அவசியம் கிடையாது. பெரியார் சொன்னதுதானே இதெல்லாம்!

திருமணம் செய்து வைக்கும்போது ஒரு மணமகள் கண் கலங்கினார். கேட்டால், திருமணமான மகிழ்ச்சியில் என்றார். ஆனந்த கண்ணீர் போல. இன்னொருவர் ஐந்து முடிச்சு போட்டுள்ளார். ஏன் என்று கேட்டால், ஸ்ட்ராங்காக இருக்க என்கிறார். இன்னொரு பெண் அழுததைப் பார்த்து, இனி அந்த மணமகன்தான் அழப் போகிறார் என கலாநிதி வீராசாமி நகைச்சுவையாகச் சொன்னார். இப்படியெல்லாம் இல்லாமல் ஒருவருக்கொருவர் விட்டுக் கொடுத்து சுயமரியாதையோடு வாழ வேண்டும். இது சுயமரியாதை திருமணம் என்பதால் உங்களுக்கெல்லாம் பெரிய அறிவுரை சொல்ல தேவையில்லை. ஏனென்றால் இங்கு பாதி பேர் காதல் திருமணம். எனவே ஒருவருக்கொருவர் விட்டுக் கொடுத்து, நல்ல நண்பர்களாக இருந்து, நல்ல இணையர்களாக இருந்து நீங்கள் உங்களின் வாழ்க்கையை வாழ வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

### திராவிட இயக்கம்!

இத்தகைய சுயமரியாதைத் திருமணங்களுக்கு ஒரு காலத்தில் சட்ட அங்கீகாரமே கிடையாது. திராவிட முன்னேற்ற கழகம் முதன் முதலாக ஆட்சிக்கு வந்த பொழுதுதான், பேரறிஞர் அண்ணா அவர்கள் முதலமைச்சராக பொறுப்பேற்ற பிறகுதான், சுயமரியாதைத் திருமணத்திற்கு சட்டம் அங்கீகாரத்தைப் பெற்றுத் தந்தார். இப்பொழுதெல்லாம் சுயமரியாதைத் திருமணங்கள் தமிழ்நாடு முழுவதும் ஏராளமாக நடக்கிறது. தமிழ்நாட்டில் திராவிட இயக்கம் ஏற்படுத்தி இருக்கின்ற பண்பாட்டுப் புரட்சி. இது போன்ற பண்பாட்டுப் புரட்சியை இந்த மண்ணில் திராவிட இயக்கம் நடத்திக் கொண்டிருப்பதன் காரணத்தினால்தான் நம் மீது ஆரியர்களுக்கும், ஆரிய அடிமைகளுக்கும் அடங்காத வயிற்று எரிச்சல், கோபம் வருகின்றது. அதைப்பற்றி நமக்கு கவலையில்லை, நமக்கு வேண்டியதெல்லாம் தமிழ்ப் பண்பாடு, தமிழ்மொழி காக்கப்பட வேண்டும்.

## அ.தி.மு.க.வை பா.ஜ.க.வில் இணைத்து விடுவார் எடப்பாடி!

### மகளிர் விடியல் பயணத் திட்டம்!

தமிழர்களின் வாழ்வு உலக அளவில் சிறந்து விளங்கிட வேண்டும். இதுதான் நம் திராவிட இயக்கத்தின், நம் முதலமைச்சரின் ஒரே குறிக்கோள். அதன் அடிப்படையில் தான் நம் திராவிட மாடல் அரசின் முதலமைச்சர் அவர்கள் பல திட்டங்களைத் தீட்டி செயல்படுத்தி வருகிறார். பெண்கள் வெளி உலகத்திற்கு பயணம் செல்ல வேண்டும் என்ற நோக்கத்தில்தான் மகளிர் விடியல் பயணம் திட்டத்திற்கு முதலமைச்சர் கையெழுத்திட்டார். கிட்டத்தட்ட ஒவ்வொரு மகளிரும் இந்தத் திட்டத்தின் வாயிலாக மாதம் ஆயிரம் ரூபாய் வரை சேமிக்கிறார்கள்.

அதுமட்டுமல்ல, நூறு வருடங்களுக்கு முன்பு பெண்கள் வீட்டை விட்டு வெளியே வருவதற்கு உரிமை கிடையாது. படிப்பதற்கு உரிமை கிடையாது. இன்னும் சொல்லப்போனால், 100 வருடத்திற்கு முன்பு பெண்கள் மேலாடை அணிவதற்கு உரிமை கிடையாது. ஆனால் இன்றைக்கு பெண்கள் வெளியில் வரவேண்டும், படிக்க வேண்டும். பள்ளி படிப்பு மட்டும் பத்தாது உயர் கல்வி வரை படிக்க வேண்டும் என்றுதான் நம் முதலமைச்சர் அவர்கள் புதுமைப்பெண் திட்டத்தை அறிமுகப்படுத்தினார்.

## கழக ஆட்சி மீண்டும் அமைந்திட அயராது பணியாற்றுவீர்!

### கலங்கி நிற்கும் எதிர்க்கட்சிகள்!

மாதந்தோறும் சுமார் 2 இலட்சம் மாணவிகள் இத்திட்டத்தால் பயன்பெற்று வருகின்றனர். இப்போது ஆண்களை விட பெண்கள் அதிக எண்ணிக்கையில் கல்லூரிக்கு படிக்கச் செல்கிறார்கள். உடனே, பெண்களுக்கு நிகராக ஆண்களும் உயர்கல்வி படிக்க வேண்டும் என்பதற்காக தமிழ்ப்புதல்வன் திட்டத்தை தலைவர் அறிமுகப்படுத்தினார்.

காலையிலிருந்து வேலைக்கு நேரமாகச் செல்லும் பெற்றோர்கள் குழந்தைகளை பள்ளிக்கு அனுப்பும்போது பசியோடு அனுப்பிவிடுவார்கள். சமைக்க நேரம் இருக்காது. அரசுப் பள்ளியில் படிக்கின்ற அந்த குழந்தைகள் பசியோடு இருக்கக்கூடாது என்பதற்காகவே, இந்தியாவிலேயே முதன்முறையாக அரசுப் பள்ளிகளில் காலை உணவுத் திட்டத்தை தொடங்கிவைத்தார் நம்முடைய முதலமைச்சர். நாள்தோறும் கிட்டத்தட்ட 20 லட்சம் குழந்தைகள் இந்தத் திட்டத்தின் மூலம் பயன்பெற்று வருகிறார்கள்.

இது எல்லாவற்றிற்கும் மேலாக, தேர்தல் அறிக்கையில் கொடுத்த வாக்குறுதி. முத்தமிழறிஞர் கலைஞர் பெயரிலான மகளிர் உரிமைத் தொகை திட்டம். இதுவரைக்கும் ஒரு கோடியே 16 லட்சம் மகளிர் இந்தத் திட்டத்தின் மூலம் சென்ற ஆண்டு செப்டம்பர் மாதத்தில் இருந்து இன்றைக்கு வரைக்கும் மாதந்தோறும் கலைஞர் மகளிர் உரிமைத் தொகையை பெற்றுக் கொண்டிருக்கிறார்கள். இதையெல்லாம் நாம் மக்களிடம் பேச வேண்டும். இதுபோன்ற திட்டங்களால் தமிழ்நாட்டின் வளர்ச்சியைப் பொறுத்துக் கொள்ள முடியாமல், தமிழ் பண்பாட்டின் காவலாக விளங்குகின்ற இந்த ஆட்சியை பொறுத்துக் கொள்ள முடியாமல் எதிர்க்கட்சிகள் கலங்கி போயிருக்கிறார்கள்.

### மக்களிடம் செல்லுங்கள்!

குறிப்பாக, எதிர்க்கட்சித் தலைவர் எடப்பாடி பழனிச்சாமி அவர்களுக்கு, மக்கள் நம் திட்டங்களை எப்படி கொண்டாடுகிறார்கள் என்பதை பார்த்து அவருக்கு கோபம் வருகிறது, எரிச்சல் வருகிறது. ஆனால் மக்கள் நம் முதலமைச்சரை வாழ்த்துகின்றனர். அதுமட்டுமல்ல ஏன் எல்லா திட்டத்திற்கும் கலைஞர் பெயரை வைக்கிறீர்கள் என்றும் எடப்பாடி பழனிசாமி கேட்கிறார். 94வது வயது வரைக்கும் தமிழ்நாட்டிற்காக, தமிழ்நாட்டின் மக்களுக்காக ஓயாது உழைத்த முத்தமிழறிஞர் கலைஞர் பெயரை சூட்டாமல் வேறு யார் பெயரை சூட்ட முடியும்?

கூவத்தூரில் உருண்டு போன கரப்பான் பூச்சி பெயரை வைக்கலாமா? மறைந்த முன்னாள் முதலமைச்சர்கள் எம்.ஜி.ஆர் அல்லது அம்மையார் ஜெயலலிதா அவர்களின் பெயரை சூட்டினால் கூட எடப்பாடி பழனிச்சாமி அவர்கள் ஒத்துக்கொள்ள மாட்டார். மோடி அல்லது அமித்ஷா பெயரை வைத்தால் வேண்டுமானால் ஒத்துக்கொள்வார். எந்த நேரத்திலும் பா.ஜ.க.வோடு கூட்டணி கிடையாது என்று 3 மாதங்களுக்கு முன்புதான் கூறினார், ஆனால், சேலத்தில் 10 நாட்களுக்கு முன்புதான் ஒரு ரெய்டு நடந்தது.

கூட்டணி பற்றி இப்போது பேச முடியாது என்று அடுத்த நாளே சொல்லிவிட்டார். தேர்தல் நெருக்கத்தில் இதைப் பற்றி பேசிக் கொள்ளலாம் என்று சொல்லிவிட்டார். இன்னும் சொல்லப்போனால், இன்னும் ஒரு ரைடு நடந்தால் போதும் அ.தி.மு.க.வை, பா.ஜ.க.வோடு இணைத்தாலும் இணைத்து விடுவார். அந்த அளவுக்குத்தான் இருக்கிறது இன்றைக்கு அ.தி.மு.க.வின் நிலைமை.

2026 ஆம் ஆண்டு தேர்தல் மிக மிக முக்கியமானத் தேர்தல். 2024 நாடாளுமன்ற தேர்தலில் 40க்கு 40 தொகுதி மிகப் பெரிய வெற்றி. சாதனை வெற்றியை தமிழ்நாட்டு மக்கள் நம் முதலமைச்சர் அவர்களுக்கும் நம் மதச்சார்பற்ற முற்போக்கு கூட்டணிக்கும் கொடுத்திருக்கிறார்கள். அதன் தொடர்ச்சியாக 2026 ஆம் ஆண்டு சட்டமன்றத் தேர்தலில் 234 தொகுதிகளில் குறைந்தது 200 தொகுதிகளில் வென்றாக வேண்டும் என்று தலைவர் அவர்கள் அறிவுறுத்தி இருக்கிறார். அதற்கு நீங்கள் உங்களின் பங்களிப்பைத் தர வேண்டும். கழக அரசின் திட்டங்களை எல்லாம் நீங்கள் மக்களிடம் கொண்டு சென்று சேர்க்க வேண்டும்.

### ஏழாவது முறை!

ஒவ்வொரு வீடாக ஏறி இறங்க வேண்டும். இலக்கு 200 என்பதை மனதில் ஏந்தி ஒவ்வொரு வாக்காளரையும், தேர்தலுக்கு முன்பாக நான்கு அல்லது ஐந்து முறை சந்தித்துப்பேசி, அவர்களிடம் நம் திட்டங்களைப் பற்றி சொல்ல வேண்டும். அடுத்து வருகின்ற ஒவ்வொரு நாளும் மிக மிக முக்கியம். ஏழாவது முறையாக கழகத்தை ஆட்சிக் கட்டிலில் அமர்த்த அயராது உழைக்க வேண்டும் என்று நம் உடன்பிறப்புகள் அத்தனை பேரையும் கேட்டுக்கொள்கிறேன்.

இங்கு இல்வாழ்வில் இணையும் 48 இணையர்களுக்கும் ஒரே ஒரு வேண்டுகோள். அண்ணன் பொன்முடி அவர்கள் சொன்னதைப் போல் நீங்கள் ஒருவரை ஒருவர் புரிந்து கொண்டு சுயமரியாதையுடன் வாழ வேண்டும். உங்களுக்குப் பிறக்கின்ற குழந்தைகள் அது ஆணாக இருந்தாலும் சரி, பெண்ணாக இருந்தாலும் சரி அழகான ஒரு தமிழ் பெயரில் பெயர் சூட்ட வேண்டும் என்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

ஒவ்வொரு இணையரும் பெரியாரும் பகுத்தறிவும் போல, அண்ணாவும் மாநில சுயாட்சியும் போல, கலைஞரும் கழகமும் போல, நம் தலைவர் அவர்களும் உழைப்பும் போல பல்லாண்டு வாழ்க வாழ்க என்று வாழ்த்தி அண்ணன் ஆர்.டி.சேகர் அவர்களுக்கு எனது நன்றியைத் தெரிவித்து இந்த வாய்ப்புக்கு நன்றி கூறிக் கொள்கிறேன்.

இவ்வாறு துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் உரையாற்றினார்.

### பங்கேற்றவர்கள்!

நாடாளுமன்ற உறுப்பினர் கலாநிதி வீராசாமி, சட்டமன்ற உறுப்பினர்கள் எபினேசர், ஐட்ரீம்ஸ் மூர்த்தி, கே.பி.சங்கர், தலைமைச் செயற்குழு உறுப்பினர்கள் இளைய அருணா, நா.மனோகரன், இரா.கருணாநிதி, கழக அணிகளின் மாநில நிர்வாகிகள் மருதுகணேஷ், பாண்டிச் செல்வம், நரேந்திரன், மாவட்டக் கழக நிர்வாகிகள் வெற்றி வீரன், எஸ்.ஆர்.கமலகண்ணன், மு.கோபி, நாகம்மை கருப்பையா, தயாளன், பகுதிக் கழகச் செயலாளர்கள் இரா.லட்சுமணன், ஜெபதாஸ் பாண்டியன், சுரேஷ், செந்தில்குமார், ஜெயராமன், முருகன், சட்டமன்றத் தொகுதிப் பார்வையாளர்கள், சுபைர்கான், கன்னிகை ஸ்டாலின், கே.வி.லோகேஷ், பொதுக்குழு உறுப்பினர்கள் சிவக்குமார், ராஜேந்திரன், தமிழ்ச்செல்வன், கமலக்கண்ணன், மதிவாணன், அமலு, சண்முகம், தஞ்சை வடக்கு மாவட்ட அமைப்பாளர் ஜி.கே.எம்.ராஜா, வடகிழக்கு மாவட்ட இளைஞரணி அமைப்பாளர் ஆர்.டி.மதன்குமார், மாவட்ட இளைஞரணி அமைப்பாளர்கள் லயோலா மதன், பொன் இளவரசன், கௌதமன், சோமசுந்தர மூர்த்தி, ரவிக்குமார், வட்டச் செயலாளர் கதிரேசன் உள்பட கழக முன்னணியினர் பலரும் கலந்து கொண்டனர்.